# NEWS LETTER


Contact Us !

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.

Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780


http://wa.me/+94777105569


Vivekananda Community Foundation




## வெருகல் துவாரகா வித்தியாலய மாணவர்களுக்கான மதிப்பீடு

**மனித நேய நம்பிக்கை நிதியத்தின்** நிதி அனுசரணையுடன் வெருகலில் அமைந்துள்ள துவாரகா வித்தியாலயத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற கணினிக் கூடத்தினை மேற்பார்வை செய்வதற்கான களவிஜயம் எமது குழுவினரால் முன்னெடுக்கப்பட்டதோடு இத்திட்டத்தின் எதிர்கால செயற்பாடுகள் பற்றியும் பாடசாலை அதிபருடன் கலந்துரையாடப்பட்டது. அவ்வாறே, மாணவர்களுடனான கலந்துரையாடலையடுத்து அவர்களுக்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டதோடு செய்முறைப் பரீட்சைகளும் மேற்கொள்ளப்பட்டது.













சமூகத்தின் மாற்றத்திற்கான ஒரு செயற்பாடாக விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற 'மாதம் ஒரு களம்' எனும் செயற்பாடானது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் ஒருங்கிணைப்பில் கல்லூரியினால் மாதாந்தம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் 'மாதம் ஒரு களம்' செயற்பாடானது பலாச்சோலை பிரதேசத்தில் உள்ள தையல் தொழிலாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்டதோடு, உள்ளூரில் சிறியளவில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆடைக்கைத்தொழிலை இன்னுமொரு படி முன்னேற்றி வணிகத் திட்டச் சுருக்கம், குறைந்தபட்ச தயாரிப்பு, வணிகத்திற்கான Whatsapp பயன்பாடு என்பன தொடர்பில் தொழில் வழிகாட்டுதல்கள் மேற்கொள்ளப்பட்டது.

நன்கொடையாளரின் பிறந்த தினத்தை முன்னிட்டு.....

புலம்பெயர் உறவுகளின் அனுசரணையுடன் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது சமூக மாற்றத்திற்கான வலுவூட்டலுக்காக பல்வேறுபட்ட செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் எமது அறக்கட்டளையுடன் இணைந்து செயற்படும் நன்கொடையாளராகிய Ms.Carriere Karen (Member of Fanoamoa Committee) அவர்களின் பிறந்த தினம் ஆரையம்பதியில் அமைந்துள்ள புகலிடத்தில் பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களுடன் இணைந்து கொண்டாடப்பட்டதோடு மாணவர்களுக்கான சத்துணவுப் பொதிகளும் வழங்கிவைக்கப்பட்டது. அவ்வாறே, Ms.Carriere Karen அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகளும் நடப்பட்டது.




















கல்லூரியின் செயற்பாடுகள் மற்றும் கல்லூரியைப் பார்வையிடும் வண்ணம் மட்/கரையாக்கந்தீவு கணேசர் வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட தரம் 9 - தரம் 11 வரையிலான மாணவ மாணவிகள் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது. கல்லூரியின் முதல்வர் மற்றும் பயிற்சி உத்தியோகத்தரால் கல்லூரியின் செயற்பாடுகள் பற்றிய அறிமுகம் வழங்கப்பட்டதோடு NVQ கல்வி முறைமை பற்றிய விளக்கமும் தொழிற்கல்வி மற்றும் எதிர்காலத்தில் கணினிக் கல்வியின் அவசியமும் தெளிவூட்டப்பட்டது.

அதனைத்தொடர்ந்து மாணவர்கள் கல்லூரியைப் பார்வையிட்டதோடு Chess, Carom, Archery என வெளிக்கள செயற்பாடுகளிலும் கலந்து சிறப்பித்தமை சிறப்பானதாகும்.

விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி பயிலுனர்களுக்கான பல்வேறு பயிற்சிப்பட்டறைகள், வாழ்க்கைக்கு தேவையான வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை வழங்கி வரும் நிலையில், கல்லூரியின் வளவாளர்கள் மற்றும் விவேகானந்த குழுமத்தின் பணிபுரியும் சேவையாளர்களின் வன்திறன் மற்றும் மென்திறன்களை அடையாளப்படுத்தி, மேலும் மேம்படுத்தும் நோக்கில் இரண்டு நாள் பயிற்சி செயலமர்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.





விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் நிறைவேற்று பணிப்பாளர் திரு.க.பிரதீஸ்வரன் அவர்களின் தலைமையில் மட்டக்களப்பு மன்றேசா தியான இல்லத்தில் நடைபெற்ற இந்த செயலமர்வுக்கு முக்கிய வளவாளர்களாக மட்டக்களப்பு மாவட்ட முறைசாரா கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் அ.ஜெகநாதன் மற்றும் நிபுணத்துவ ஆலோசகர் இரா.கலைவேந்தன் ஆகியோர் கலந்து கொண்டு, விவேகானந்த குழுமத்தின் சேவையாளர்களுக்கு பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்கினர்.










மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் office management & It பாடநெறியினை பூர்த்தி செய்த பயிலுனர்களுக்கான Field visit அறிக்கையினை சமர்பித்தல் நிகழ்வானது கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பயிலுனர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரச மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களில் கட்டமைப்பு அதன் செயற்பாடுகள் மற்றும் அங்கு காணப்படும் கற்கைநெறிகள் பற்றிய விடயங்களை மிகத்தெளிவான முறையில் சமர்ப்பித்தமை குறிப்பிடதக்கவிடயமாகும்.




இன்றைய காலகட்டத்தில் வளர்ந்து வரும் தொழில்நுட்ப உலகில் உரிய வழிகாட்டல்கள் இன்மையினால் பல இளைஞர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகும் அபாய நிலையில் உள்ளமை சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும். அந்தவகையில், இளைஞர்களுக்கான சரியான வழிகாட்டல்களை வழங்கி, அவர்களின் திறன்களை மேம்படுத்துவதன் மூலம் அவர்களை சமூகத்தின் மத்தியில் சாதனையாளர்களாக மாற்றுவதில் விவேகானந்த தொழில்நுட்பக் கல்லூரி தசாப்தம் கடந்த சேவையினை ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.













## 2025 க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான வாழ்த்து நிகழ்வு

பாடசாலை சமூகங்களுடன் ஒருங்கிணைந்து மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக பல செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியானது 2025 க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றும் **370 மாணவர்களுக்கான** வாழ்த்து நிகழ்வில் கலந்துகொண்டதோடு பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களை வாழ்த்தி, பேனாக்களை வழங்கி வைத்தனர். மேலும், குறித்த பாடசாலைகளில் தற்போது பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு கடந்த காலங்களில் விவேகானந்த தொழில்நுட்பக் கல்லூரி ஊடாக செயலமர்வுகள் மற்றும் ஏனைய கல்வி செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

- மட்/பட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்
- அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயம்







# TOP NEWS

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் பல்வேறு தரப்பினராலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, ஏறாவூர் பற்று, செங்கலடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக இடம்பெயர்ந்து, தற்காலிக இடைத்தங்கள் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கான அத்தியாவசிய உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

செங்கலடி கொம்மாதுறையினை மையமாக கொண்டு தொழில்பயிற்சியினை வழங்கி வருகின்ற VCOT நிலையத்தின் விவேகானந்த சமுதாய அறக்கட்டளை பிரிவின் ஏற்பாட்டில் செங்கலடி பிரதேச செயலகத்தின் வழிகாட்டலில், பாதிக்கப்பட்ட மக்களின் உடனடித் தேவைகளைக் கருத்திற்கொண்டு இந்த நிவாரணப் பணி முன்னெடுக்கப்பட்டது. குறித்த உதவித் திட்டத்தின் கீழ், முகாம்களில் தங்கியுள்ள மிகவும் பாதிக்கப்பட்ட 80 குடும்பங்களுக்கு அவசியமான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த மனிதாபிமானப் பணிக்குத் தேவையான நிதியுதவியினை "மனித நேய நம்பிக்கை நிதியம்" (Manitha Neya Trust) மற்றும் அதன் நன்கொடையாளர்கள் வழங்கியிருந்தனர்.







அனர்த்த வேளைகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான விசேட தேவைகளை நிறைவு செய்யும் வகையில் தமது அறக்கட்டளை தொடர்ச்சியாக இத்தகைய உதவிடும் உறவுகள் மூலமாகப் பணிகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தை மையப்படுத்தியதாக மாணவர்களின் மாற்றத்திற்கான பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில், அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்திற்கான புதிய காணியினுள் ஆதித்யன் அவர்களின் நினைவாக இலண்டனில் வசித்து வரும் அவரது நண்பன் திருச்செல்வம் லக்கீஸ்வரன் அவர்களின் அனுசரணையில் 200 கமுகு மரக்கன்றுகள் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் சாரதா நிலையத்தின் தலைவர் பொன்.பேரின்பநாயகம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நிலைய முகாமையாளர் உத்தியோகத்தர்கள் மற்றும் சாரதா நிலைய மாணவிகள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தமை சிறப்பானதாகும்.

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது.

- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவெளி வாழும்கலை நம்பிக்கை நிதியம்
- நந்தவனம் முதியோர் இல்லம்
- புகலிடம் (சத்துணவுப் பொதிகள்)



இவ்வாறு எமது சிறுவர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு நீங்களும் உங்களால் முடிந்த உதவியை வழங்குவதன் மூலம் எமது சமூக வலுவூட்டலில் பங்களிப்பை மேற்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

## Donation – Request details

**Annai Sri Sarada Center**

**Special Meal per Day - LKR 40,000**

**Sponsor a Pre-School**

**per Month - LKR 65,000**

**Nutritious Food per Child - LKR 3,000**

**Jeevananda Girls Home**

**Special Meal per Day - LKR 20,000**

**Nandavanam Elders Home**

**Special Meal per Day - LKR 15,000**

**Sponsor a Youth**

**per Technician - LKR 10,000**

**Sponsor a Student**

**per Month - LKR 3,500**

**Nutrion Pack for Pugalidam Disables Center**

**per Pack - LKR 3,500**

**Education Materials For School students**

**per Pack - LKR 5,000**